பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
02 08 2025 6 45
சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின் 20வது தவணைத் தொகையை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று விடுவிக்க உள்ளார்.

2. ரயில் நிலையங்களில் பயணிகள் நெரிசல் இல்லாமல் பயணம் செய்ய உரிய நடவடிக்கைகளை ரயில்வே எடுத்துள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

3. தேசிய திரைப்பட விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளவர்களுக்கு தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

4. நலம் காக்கும் திட்டத்தை சென்னையில் **முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின்** இன்று தொடங்கி வைக்கிறார்.

5. இந்தியாவுக்கு எதிரான 5வது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து முதல் இன்னிங்சில் 247 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின் 20வது தவணைத் தொகையை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று விடுவிக்க உள்ளார்.

தமது தொகுதியான வாரணாசியில் இன்று நடைபெறும் விழாவில் இதனை அவர் தொடங்கி வைக்கிறார்.

இதன் பின்னர் நாடு முழுவதும் உள்ள 9 கோடியே 70 லட்சம் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் 20 ஆயிரத்து 500 கோடி ரூபாய் வரவு வைக்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதையடுத்து இதுவரை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ள வருவாய் ஆதரவு தொகை 3 லட்சத்து 90 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரிக்கும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

நலம் காக்கும் திட்டத்தை சென்னையில் **முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின்** இன்று தொடங்கி வைக்கிறார்.

சென்னை உட்பட 19 மாநகராட்சிகளுக்கு உட்பட்ட 57 இடங்களிலும், ஊரகப் பகுதிகளிலும் மொத்தம் ஆயிரத்து 256 முகாம்களுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

இந்த முகாம்களில் நீரிழிவு, உயர் ரத்த அழுத்தம், இதயம், சிறுநீரகம் உள்ளிட்ட பல்வேறு பாதிப்புகள் தொடர்பான பரிசோதனைகள் நடைபெற உள்ளன.

காது, மூக்கு., தொண்டை, பல் மருத்துவ சேவைகளும், பெண்களுக்கு கருப்பை வாய் மற்றும் மார்பகப் புற்றுநோய் ஆகியவற்றை கண்டறிதல் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு மருத்துவப் பரிசோதனைகளும், மருத்துவ சேவைகளும் வழங்கப்பட உள்ளன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை இந்த முகாம்கள் நடைபெறும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

<<<<>>>>

நாட்டில் உள்ள 73 முக்கியமான ரயில் நிலையங்களில் பண்டிகை காலத்தின்போது பயணிகள் நெரிசல் இல்லாமல் பயணம் செய்ய ஏதுவாக உரிய நடவடிக்கைகளை ரயில்வே எடுத்துள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இது தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர், நெரிசலைக் குறைக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் அதிகாரம் ரயில் நிலைய மேலாளருக்கு வழங்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

நெரிசல் அதிகமாக இருக்கும்போது ரயில் நிலையத்தில் ஒரே நேரத்தில் பொதுமக்கள் நுழைவதை தடுத்து நெரிசல் இல்லாமல் செல்வதற்காக 5 ரயில் நிலையங்களில் சோதனை ரீதியாக புதிய முன்முயற்சி தொடங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கண்காணிப்பு கேமராக்கள் மூலமாக தீவிர கண்காணிப்பு, ஒலிபெருக்கிகள் மூலம் முறையான அறிவிப்பு, அவசர நிலையை கையாள தனி அறைகள் என பல்வேறு ஏற்பாடுகள் முக்கியமான ரயில் நிலையங்களில் செய்யப்பட்டுள்ளதாகக் கூறினார்.

பயணச்சீட்டு இல்லாதவர்கள் மற்றும் காத்திருப்பு பட்டியலில் உள்ளவர்கள் ரயில் வரும் வரை காத்திருப்பு பகுதிக்கு வெளியே அமர அனுமதிக்கப்படுவார்கள் என்றும் அமைச்சர் கூறினார்.

<<<<>>>>

அதிகரித்து வரும் கைபேசி பழக்கத்திலிருந்து மாணவர்களை விடுவித்து புத்தகங்களை வாசிக்கும் பழக்கத்திற்கு ஆசிரியர்களும், பெற்றோர்களும் அவர்களை தயார்படுத்த வேண்டும் என்று பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் கேட்டுக்கொண்டார்.

நாகை புத்தகக் கண்காட்சியை நேற்று தொடங்கி வைத்து அவர் பேசுகையில் இதனைத் தெரிவித்தார்.

**(Voice Byte – Anbil – 40 sec)**

<<<<>>>>

கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த திமுக அரசு தவறிவிட்டதாக அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

தூத்துக்குடியில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்ட அவர், கட்டுமானப் பணிகளுக்குத் தேவைப்படும் செங்கல், மணல், ஜல்லி, சிமெண்ட் உள்ளிட்ட பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதாகக் கூறினார்.

கட்டிடத்திற்கான திட்ட அனுதிக் கட்டணத்தை மாநில அரசு 100 சதவீதம் உயர்த்தியுள்ளதாகவும், சொத்து வரி, கடைகள் மீதான வரி உள்ளிட்டவற்றை 150 சதவீதம் உயர்த்தியுள்ளதாகவும் அவர் குறை கூறினார்.

மாநிலத்தில் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள விவசாயிகளுக்கு கறவை மாடுகள் வாங்குவதற்கு கடன் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பால்வளத்துறை அமைச்சர் திரு. மனோ தங்கராஜ் கூறியுள்ளார்.

பெரம்பலூர் மாவட்டம் திருவளக்குறிச்சியில் சுமார் 27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பால் கொள்முதல் நிலையம் மற்றும் பால் பவுடர் தயாரிப்பு நிலைய கட்டுமானப் பணிகளை நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

இந்த நிலையத்திற்காக 121 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பால் பொருட்கள் தயாரிக்கும் எந்திரங்கள் கொள்முதல் செய்யப்படும் என்று கூறினார்.

முன்னதாக 85 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 227 பயனாளிகளுக்கு சுமார் 3 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை அமைச்சர் வழங்கினார்.

<<<<>>>>

ஈரோடு மாவட்டம் கீழ்பவானி கால்வாயில் ஏற்பட்டுள்ள கசிவை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு. முத்துசாமி தெரிவித்துள்ளார்.

அதிகாரிகள் ஆய்வு நடத்தி கசிவை சரிசெய்ய நடவடிக்கை எடுப்பார்கள் என்று அவர் தெரிவித்தார்.

கீழ்பவானி கால்வாயில் முறையான ஆய்வுக்குப் பிறகே தண்ணீர் திறக்கப்பட்டதாகவும், தண்ணீரை நிறுத்துவது குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை என்றும் திரு. முத்துசாமி கூறினார்.

<<<<>>>>

தேசிய திரைப்பட விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளவர்களுக்கு தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

'பார்க்கிங்' திரைப்படத்தில் சிறந்த நடிப்பை வெளிப்படுத்தியதற்காக சிறந்த குணச்சித்திர நடிகருக்கான தேசிய விருது பெறும் திரு. எம்.எஸ். பாஸ்கர் மற்றும் திரைக்கதைக்கான விருதை வென்றுள்ள படக் குழுவுக்கும் வாழ்த்துகளை தெரிவிப்பதாக அவர் கூறியுள்ளார்.

2023ஆம் ஆண்டு வெளியான வாத்தி திரைப்படத்தில் சிறந்த முறையில் இசையமைத்தற்காக விருது பெற உள்ள இசையமைப்பாளர் திரு. ஜி.வி. பிரகாஷ், சிறந்த ஒளிப்பதிவிற்காக தேசிய விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள லிட்டில் விங்ஸ் குறும்படத்தை தயாரித்த படக்குழுவினார் ஆகியோருக்கும் அமைச்சர் வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக தமிழகத்தின் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, கடலூர், விழுப்புரம், அரியலூர் ஆகிய 8 மாவட்டங்களின் ஒருசில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வானிலை மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

ரஷ்யாவின் **Kuril** தீவில் நேற்றிரவு கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 6 புள்ளி 2ஆக பதிவானது.

<<<<>>>>

மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான நைஜரில் நேற்று நடைபெற்ற தீவிரவாத தாக்குதலின்போது இந்தியர்கள் 2 பேர் உயிரிழந்தனர். ஒரு இந்தியர் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

-----------

பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்குள் ஆயுதங்களைக் கடத்த முயன்றதாக 5 பேரை கைத்துப்பாக்கிகளுடன் பஞ்சாப் மாநில காவல்துறையினர் கைது செய்தனர்.

<<<<>>>>

பெங்களூரு நகருக்கு நாள்தோறும் வருகை தரும் உள்நாடு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் கூடுதலாக ஒரு விமான நிலையம் தேவைப்படுவதாக அம்மாநில துணை முதலமைச்சர் திரு. டி.கே. சிவகுமார் கூறியுள்ளார்.

<<<<>>>>

உலக தாய்ப்பால் வார விழாவை முன்னிட்டு நாமக்கல் மாவட்டத்தில் தாய்மார்களுக்கான சத்துணப் போட்டி மற்றும் ஊட்டச்சத்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மாவட்ட ஆட்சியர் திருமதி துர்கா மூர்த்தி நேற்று தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

விழுப்புரம் மாவட்டம் அவலூர்பேட்டையில் முக்கியமான 23 இடங்களில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராக்களை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் சரவணன் தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஸ்ரீபெரும்புதூர் நகராட்சி மற்றும் குன்றத்தூர் ஒன்றியத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை அம்மாவட்டத்திற்கான கண்காணிப்பு அலுவலர் திரு. கந்தசாமி நேரில் ஆய்வு செய்தார்.

<<<<>>>>

12 நாட்கள் நடைபெறும் ஈரோடு புத்தகத் திருவிழா நேற்று தொடங்கியது.

<<<<>>>>

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி, சின்னசேலம், உளுந்தூர்பேட்டை, கல்வராயன்மலை ஆகிய பகுதிகளில் நேற்றிரவு சுமார் 3 மணி நேரம் பலத்த மழை பெய்தது.

<<<<>>>>

திருநெல்வேலி நெல்லையப்பர் திருக்கோயிலில் சுந்தரமூர்த்தி நாயனார் சேரமான் பெருமாள் திருக்கைலாய காட்சி 63 நாயன்மார் திருவீதி விழாவுடன் வெகு விமரிசையாக நடைபெற்றது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியாவுக்கு எதிரான 5வது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து முதல் இன்னிங்சில் 247 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

லண்டனில் நடைபெற்று வரும் இப்போட்டியில் நேற்று இந்தியா, முதல் இன்னிங்சில் 224 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இதனைத் தொடர்ந்து முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து, 247 ரன் எடுத்தது.

இதன் பின்னர் இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய இந்தியா நேற்று ஆட்டநேர இறுதியில் 2 விக்கெட் இழப்புக்கு 75 ரன் எடுத்தது.

ஜெய்ஸ்வால் 51 ரன்னுடனும், ஆகாஷ் தீப் 4 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

**<<<<>>>>**

**Macau** ஓபன் பேட்மிண்டன் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதிப் போட்டியில் இந்தியாவின் லக்ஷயா சென் இந்தோனேஷியாவின் **Alwi F**-ஐ இன்று எதிர்கொள்கிறார்.

**<<<<The End>>>>**